**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 32** **நாள்: 14.01.2026**

**போகிப் பண்டிகையை முன்னிட்டு, பொதுமக்களிடமிருந்து 154.17 மெட்ரிக் டன் பயன்பாட்டில் இல்லாத பொருட்கள் மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களால் பெறப்பட்டு அகற்றப்பட்டுள்ளது.**

போகிப் பண்டிகையை முன்னிட்டு, சுற்றுச்சூழல் மாசு ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 12.01.2026 முதல் 14.01.2026 ஆகிய நாட்களில் பொதுமக்கள் தங்களிடையே பயன்பாட்டில் இல்லாத பொருட்களான பழைய துணி, டயர் (Tyre), ரப்பர் ட்யூப் (Rubber Tube), நெகிழி (Plastic), காகிதக் கழிவுகள், அட்டைப் பெட்டிகள், மரக்கழிவுகள், உலோகக் கழிவுகள், மின்னணுக் கழிவுகள் உள்ளிட்டவற்றை எரிப்பதைத் தவிர்த்திடும் வகையில் தூய்மைப் பணியாளர்கள் மூலம் பொதுமக்களிடமிருந்து சேகரிக்கப்பட்டது. மேலும், இதுகுறித்து பேட்டரியால் இயங்கும் மூன்று சக்கர வாகனங்களில் உள்ள ஒலிப்பெருக்கி மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 12.01.2026 முதல் 14.01.2026 வரை 154.17 மெட்ரிக் டன் பயன்பாட்டில் இல்லாத பொருட்கள் தூய்மைப் பணியாளர்கள் மூலம் பெறப்பட்டு அகற்றப்பட்டுள்ளது.

**அதன் விவரம்:**

| வ. எண் | மண்டலம் | 12.01.2026 முதல் 14.01.2026 வரை பெறப்பட்ட பயன்பாட்டில் இல்லாத பொருட்கள் (மெட்ரிக் டன்) |
|---|---|---|
| 1 | திருவொற்றியூர் | 25.43 |
| 2 | மணலி | 11.72 |
| 3 | மாதவரம் | 24.89 |
| 4 | தண்டையார் பேட்டை | 1.23 |
| 5 | இராயபுரம் | 9.60 |

| | | |
|---|---|---|
| 6 | திரு.வி.க.நகர் | 4.25 |
| 7 | அம்பத்தூர் | 0.50 |
| 8 | அண்ணா நகர் | 11.82 |
| 9 | தேனாம்பேட்டை | 11.04 |
| 10 | கோடம்பாக்கம் | 1.96 |
| 11 | வளசரவாக்கம் | 10.91 |
| 12 | ஆலந்தூர் | 8.51 |
| 13 | அடையாறு | 14.16 |
| 14 | பெருங்குடி | 8.55 |
| 15 | சோழிங்கநல்லூர் | 9.60 |
| **மொத்தம்** | | **154.17** |

இவ்வாறு பெறப்பட்ட பொருட்கள் மாநகராட்சியின் வள மீட்பு மையங்களில் (RRC) பிரித்தெடுக்கப்பட்டு மறுசுழற்சிக்கு அனுப்பப்படுகிறது. மேலும், பயன்படுத்த இயலாத பொருட்கள் எரியூட்டி சாம்பலாக்கும் எரியூட்டும் ஆலைக்கு (Incinerator Plant) அனுப்பப்பட்டு சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் எரியூட்டப்படும்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**